
# இனிய இல்லறம் அருளும் விரதம்!

திருமணமான பெண்களுக்கு கணவனே கண்கண்ட தெய்வமென்று முன்னோர்கள் கூறுவார்கள். கணவனை மதிக்கும் பண்பைத் திருவள்ளுவர்-

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை' *(55)*

என வெகுவாகப் புகழ்கிறார். கணவன்- மனைவி ஒற்றுமையாக இருத்தல், கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும் மதித்தல் மற்றும் இல்லறத்தில் இருவரும் இணைபிரியாது வாழ்தல் போன்ற பண்பாட்டை மனிதர்களுக்கு உணர்த்தவே ஒரு திருவிளையாடலை சிவபெருமான் நடத்தினார்.



கயிலையில் சிவபெருமான் பார்வதி தேவியுடன் வீற்றிருக்கும்போது பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலான தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள் வந்து வணங்கி இருவரின் ஆசிகள் பெறுவது வழக்கம். இதில் பிருங்கி முனிவர் மட்டும் சிவபெருமானை மட்டுமே வழிபடுவார். பார்வதி தேவி உட்பட மற்ற தெய்வங்களை வழிபடவும் மாட்டார்; மதிக்கவும் மாட்டார்.

ஒருநாள் பார்வதி தேவி இடைவெளி விடாமல் சிவனுடன் நெருக்கமாக அமர்ந்து காட்சியளித்தாள். அன்று அங்குவந்த பிருங்கி முனிவர் இருவரிடமும் இடைவெளி இல்லாததைக்கண்டு, வண்டு வடிவம் கொண்டு சிவபெருமானை மட்டும் சுற்றிவந்து வணங்கிச் சென்றுவிட்டார். இந்தச் செயல் பார்வதி தேவிக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்த, சக்தியற்றுப் போகும்படி முனிவரை சபித்துவிட்டாள். அதனால் அவர் உடல் வலுக்குன்றி நடப்பதற்கே சிரமப்பட்டார். இதைக்கண்டு மனம் இரங்கிய சிவபெருமான், பிருங்கி முனிவருக்கு ஊன்றுகோலாக புதியதாக ஒரு காலைக் கொடுத்து, மூன்று கால்களுடன் நடக்கும்படி வழிசெய்தார்.

தன்னை மதிக்காத பிருங்கி முனிவருக்கு சிவபெருமான் அருள் புரிந்தது பார்வதி தேவிக்கு மேலும் கோபத்தையும், வருத்தத்தையும் உண்டாக்கியது. சிவபெருமானுடன் கோபித்துக்கொண்டு பூவுலகம் சென்றுவிட்டாள்; பின்னர் தன் தவறையுணர்ந்து சிவபெருமானுடன் எப்பொழுதும் சேர்ந்தே இருக்கவேண்டும் என்பதற்காக தவமும் விரதமும் மேற்கொண்டாள். அவ்வாறு அவள் மேற்கொண்ட விரதத்



திற்குப் பெயர்தான் 'கேதார கௌரி' விரதம். தேவியின் விரதத்துக்கு மனமிரங்கிய சிவபெருமான் தன் இடது பாகத்தை பார்வதி தேவிக்குக் கொடுத்து அர்த்த நாரீஸ்வரராகக் காட்சியளித்தார். இதன்மூலம் சிவனும் சக்தியும் ஒன்றே என்பதை உலகுக்கு உணர்த்தினார்.

தமிழகத்தில் கொங்கு மண்டலத்தில் இருக்கும்- நாமக்கல் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோட்டில் (திருக்கொடிமாடச் செங்குன்றூர்) சிவபெருமான் அர்த்த நாரீஸ்வரராகக் காட்சியளிப்பதை திருஞானசம்பந்தர்-

**வெந்தவெண் ணீறணிந்து**
**விரிநூல் திகழ்மார்பின் நல்ல**
**பந்தணவும் விரலாள்**
**ஒருபாகம் அமர்ந்தருளிக்**
**கொந்தணவும் பொழில்சூழ்**
**கொடிமாடச் செங்குன்றூர்**
**நின்ற...'**

*(1-107)*

எனத் தொடங்கும் தேவாரப் பாடலில் பாடியுள்ளார். அருணகிரிநாதரும் திருப்புகழில் (அன்பாக வந்து உன்றாள் பணிந்து ஐம்பூத மொன்ற) இத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ளார்.

பிருங்கி முனிவர் தான் இழந்த சக்தியை மீண்டும் பெறவும், அறியாமையால் செய்த தவறுக்கு வருந்தியும் சிவபெருமான்- பார்வதி தேவியைக் குறித்து கடுந்தவமிருந்தார். அங்ஙனம் அவர் தவம்செய்த இடங்களில் முக்கியமானது இன்றைய சென்னை பரங்கிமலையிலிருக்கும் புனித தோமையர் மலை. ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்த பின்னர் பிருங்கி மலை என்பது காலப்போக்கில் மாறி பரங்கிமலை என மருவியது. இன்று இம்மலையை 'செயின்ட் தாமஸ் மவுண்ட்'

என்று அழைக்கிறார்கள்.

தவத்தின் பயனாக சிவபெருமான் முனிவருக்குக் காட்சியளித்த இடம்தான் இன்றைய ஆவுடைநாயகி உடனுறை நந்தீஸ்வரர் கோவில். சென்னை ஆதம்பாக்கத்திலுள்ள இந்த இடத்தில்தான் பிருங்கி முனிவருக்கு சிவபெருமான் நந்தி வடிவில் காட்சியளித்ததாக கோவில் தலப்புராணம் கூறுகிறது. நந்தீஸ்வரர் கருவறைக்கு அருகில் தெற்கு முகமாக ஆவுடை நாயகி அருள்புரிகிறாள். 'கோமதி' என்னும் சமஸ்கிருதச் சொல்லுக்கு தமிழில் ஆவுடை நாயகி (முதிர்ந்த சுமங்கலி) எனப் பொருள். சுமங்கலிப் பெண்கள் தங்களுடைய மாங்கல்யம் நிலைத்து நிற்பதற்காக இத்தலத்திற்கு வருகைதந்து வழிபடுவதுண்டு.



பிருங்கி முனிவர்

பிருங்கி முனிவர் வண்டு வடிவில் சிவபெருமானை வழிபட்டு, பின்னர் மனம் திருந்தி முக்திபெற்றதை மெய்ப்பிக்கும் வண்ணம் திருவாரூரில் திருவண்டு துறையில் வண்டுறைநாதர் திருக்கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் பற்றி திருஞான சம்பந்தர் பாடியுள்ளார். அதே போன்று கர்நாடக மாநிலத்திலுள்ள வாதாபி குடைவரைக் கோவில் சுமார் 6 மற்றும் 7-ஆம் நூற்றாண்டில் சாளுக்கிய மன்னர்களால் உருவாக்கப்பட்டது. இந்த கோவிலில் சிவபெருமானை பிருங்கி முனிவர் வழிபடுவது போன்று சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

இல்வாழ்க்கையில் கணவன்- மனைவி ஒற்றுமையுடன் இணைபிரியாது வாழவும், மாங்கல்யம் நிலைக்கவும் கேதார கௌரி விரதம் வழிசெய்கிறது. இவ்விரதத்தை புரட்டாசி மாத வளர்பிறை அஷ்டமியன்று துவங்கி சரியாக 21 நாட்கள் தொடர்ந்து கடைப்பிடித்து, ஐப்பசி மாத அமாவாசையன்று முடிக்கவேண்டும். இந்த நாட்களில் பெண்கள் சிவனும் சக்தியும் இணைந்த சிவசக்தியை முறையாக வழிபடவேண்டும். தொடர்ந்து 21 நாட்கள் விரதம், பூஜை முதலியவற்றைச் செய்யமுடியாவிடில், கடைசி நாளான தீபாவளி பண்டிகைக்கு மறுநாள் அன்று மட்டும் விரதமிருந்து அம்பிகையை வீட்டில் வழிபட்டு, பின்னர் சிவன் கோவிலுக்கு குடும்பத்துடன் சென்று வழிபட்ட பின்பு விரதத்தை முடிக்க வேண்டுமென்பது மரபு.

இனிய இல்வாழ்க்கையின் தத்துவத்தை உணர்த்தும் கேதார கௌரி விரதத்தைக் கடைப்பிடித்து, சிவசக்தியின் அருளால் இன்புறுவோமாக!

## நம்பிக்கை



ஒரு நாள் மன்னர் ஒருவர் தன் மகனுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றார். அங்கு ஓரிடத்தில் பெரிய யானைகள் கயிற்றாலும், குட்டி யானைகள் இரும்புச் சங்கிலியாலும் கட்டப்பட்டிருந்தன. இதுபற்றி அங்கிருந்த பாகனிடம் விவரம் கேட்டார் மன்னர். அதற்குப் பாகன், "மன்னா! பெரிய யானைகள் குட்டியாக இருக்கும்போது இரும்புச் சங்கிலியால்தான் கட்டப்பட்டிருந்தன. நாளாக நாளாக தங்களால் இந்தத் தளையிலிருந்து விடுபடமுடியாது என்று முடிவுக்கு வந்து நம்பிக்கையை இழந்துவிட்டன. ஆகவேதான் பெரிய யானைகளைக் கயிற்றாலும், குட்டிகளை இரும்புச் சங்கிலியாலும் கட்டியுள்ளேன்" என்றான்.